**செய்தி வெளியீடு : 483** **26.6.2008**

## பத்திரிக்கைச் செய்தி

ஊனமுற்றோருக்காக சிறந்த முறையில் பணிபுரிந்த நபர்களுக்கும், மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கும் ஆண்டுதோறும் மாநில விருதுகள் சுதந்திர தினத்தன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டும் 15.8.2008 அன்று இந்த விருதுகள் வழங்கப்படும். விருப்பமும், தகுதியும் உள்ளவர்கள் இந்த விருதினைப் பெற விண்ணப்பிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

### மாநில விருதுகள்

ஊனமுற்றோருக்காக சிறந்த முறையில் பணிபுரிந்த நபர்களுக்கும், மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கும் 15–8–2008 அன்று, அதாவது சுதந்திர தின விழா அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட எட்டு விருதுகள் வழங்கப்படும்.

1. பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்த நபர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பளித்த ஒரு தனியார் தொழிலதிபருக்கும்,
2. ஊனமுற்றோர் உயர்வுக்காக சிறப்பாக பணியாற்றிய ஒரு நிறுவனத்திற்கும்,
3. ஊனமுற்றோருக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும்,
4. ஊனமுற்றோருக்காக பணி புரிந்த சிறந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலருக்கும்,
5. ஊனமுற்றோருக்கு சிறப்பாக மருத்துவ உதவிகள் செய்த ஒரு மருத்துவருக்கும்,
6. ஊனமுற்றோருக்கு சேவையாற்றிய ஒரு சிறந்த சமூகப் பணியாளருக்கும்,
7. மகளிர் உயர்வுக்காக அருஞ்சேவையாற்றிய ஒரு மகளிர் நிறுவனத்திற்கும்,

8. மகளிர் நலத்திற்காக அரும்பணியாற்றிய ஒரு சிறந்த சமூகப் பணியாளருக்கும் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட விருதுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் விவரங்கள் அந்தந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலரிடமிருந்து அல்லது கீழ்கண்ட முகவரியிலிருந்து பெற்று, விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து, புகைப்படத்துடன் 2 நகல்களை மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலரின் பரிந்துரையுடன் அனுப்ப வேண்டும். மாநில விருதுகளுக்காக விண்ணப்பிக்க கடைசி நாள் 21.7.2008. எனவே, விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்,
15/1, மாதிரிப் பள்ளி சாலை,
ஆயிரம் விளக்கு,
சென்னை–600 006.

மாநில ஆணையர்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.